

கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியான திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோயிலைச் சேர்ந்த இரண்டு பேரின் உடலுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர் கே.சந்திரசேகரன், நகரக் கழகச் செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ம.அன்பழகன், இந்திரா பெரியார்தாசன், ஆர்.சுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, அக். 1–

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை (02.10.2025–வியாழக்கிழமை) மாலை 07.00 மணியளவில் மதுரை விமான நிலையத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், சென்னை, திருச்சி தேசிய நெடுஞ்சாலை, அய்யூர் அகரம் பாலம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த சிவரஞ்சனி அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் வழங்கினார்கள்.

### எம்.பி.க்கள் தொகுதியில் வாரத்தில் 4 நாட்கள் தங்கி பணியாற்ற வேண்டும்!

# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகாட்டுகிறார் முதல்வர்!

## 'மாலைமலர்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக். 1–

"மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகாட்டியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்" என்று 'மாலைமலர்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து 29.09.2025 தேதிய 'மாலை மலர்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–



மாலை மலர்
29–9–2025 (திங்கட்கிழமை)
மக்கள் பிரச்சினைகளை தீர்க்க வழிகாட்டும் முதல்-அமைச்சர்!

தமிழகத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்கள் நலன் சார்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மகளிர் உரிமை தொகை விடியல் பேருந்து பயணம் என பல்வேறு பெண்கள் நலன் சார்ந்த முத்தாய்ப்பான திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாணவர்கள் நலனிலும் அக்கறை கொண்டு பல திட்டங்களையும் செயலாற்றி வருகிறார். இந்த திட்டங்கள் மக்களை முறையாக போய் சென்றடைந்துள்ளதா? என்பதை கண்காணிப்பதற்காக 'உங்களுடன் ஸ்டாலின்', 'நலம் காக்கும் ஸ்டாலின்' என மக்களை தேடிச்சென்று முகாம்களையும் தமிழக அரசு நடத்தி வருகிறது.

இந்த நிலையில் மக்கள் நலத் திட்டங்கள் பொதுமக்களை முறையாக சென்றடைந்துள்ளதா? என்பதை கண்காணிக்கும் வகையிலும் தொகுதி மக்களின் பிரச்சினைகளை அருகில் அமர்ந்து கேட்டறியும் வகையிலும் தி.மு.க. எம்.பி.க்கள் தங்களது தொகுதியில் வாரத்தில் 4 நாட்கள் தங்கி இருந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

முதலமைச்சரின் இந்த உத்தரவு கட்சி வேறுபாடுகளை கடந்தும் வரவேற்பு பெற்று இருக்கிறது. சென்னையில் நடைபெற்ற தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போது தான் முதலமைச்சர் இந்த அறிவுரையை தனது கட்சியின் எம்பிக்களுக்கு வழங்கி இருக்கிறார்.

அதே நேரத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' 'நலன் காக்கும் ஸ்டாலின்' என நடத்தப்படும் தமிழக அரசின் முகாம்களில் மகளிர் உரிமை திட்டத்திற்காக பொதுமக்கள் அளித்துள்ள மனுக்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை கண்டறிந்து தகுதி வாய்ந்த மகளிர் அனைவருக்கும் ரூ.1000 உரிமை தொகை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி இருக்கிறார்.

இதுபோன்று தொகுதிகளில் தங்கி இருந்து என்னென்ன பணிகளை செய்தீர்கள் என்பது பற்றிய அறிக்கையை 15 நாட்களுக்கு ஒரு முறை அளிக்க வேண்டும் எனவும் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார். முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழகத்தில் தற்போது 39 தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகளை சேர்ந்தவர்களே எம்.பி.க்களாக இருக்கிறார்கள். எப்போதுமே மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தொகுதி நலன் சார்ந்த பிரச்சினைகளில் கூடுதல் கவனம் செலுத்துவதில்லை என்கிற குற்றச்சாட்டு பொது மக்கள் மத்தியில் பரவலாகவே இருந்து வருகிறது. இதனைப் போக்கும் வகையிலேயே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எம்.பி.க்கள் அனைவரும் மக்களோடு மக்களாக நின்று பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தி உள்ளார்.

இதன் மூலம் தொகுதிகளில் நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் தேங்கிக் கிடக்கும் பணிகளுக்கும் விடிவுகாலம் பிறக்கும். அதே நேரத்தில் அரசின் திட்டங்களும் மக்களை முழுமையாக சென்றடையும் என்பதால் அரசியல் வேறுபாடுகளை கடந்து முதலமைச்சரின் நடவடிக்கை மற்ற கட்சிகளுக்கும் வழிகாட்டும் வகையிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து மக்கள் நலன் சார்ந்த முதலமைச்சரின் இத்தகைய நடவடிக்கைகளை ஒட்டுமொத்த தமிழக மக்களுமே பாராட்டி வரவேற்றுள்ளனர்.

இவ்வாறு 'மாலைமலர்' நாளேடு தனது தலையங்கத்தில் கூறியுள்ளது.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்

# கழக செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, அக். 1 –

தலைமைக் கழக சட்டத்துறை நிர்வாகிகள் மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டமானது 29.09.2025, திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், துணை செயலாளர் எஸ்.ராஜா முகமது, தலைமைக் கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் பூத் கள பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா. பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர் குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என். பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கு.குமார் சேரலாதன், தலைவர் பொ.கிங்ஸ்லி கோல்டுவின், துணை தலைவர் ப. லீனஸ் ராஜ், நாகர்கோவில் மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஐ.சகாய டெல்வர் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கரூர் சோக சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாக மருத்துவமனைக்கு நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியும், இறந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தியும், அவரது உறவினர்களுக்கு ஆறுதல் கூறியும், நிதி உதவியும் வழங்க உத்தரவிட்ட கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கரூரில் நிகழ்ந்த துயர சம்பவம் மிகவும் வேதனைக்குரியது இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக அஞ்சலி செலுத்துவதோடு, உயிரிழந்த குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிட்சை பெற்று வரும் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தலைமைக் கழக சட்டத்துறை நிர்வாகிகள் மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், துணை செயலாளர் எஸ்.ராஜா முகமது, தலைமைக் கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் பூத் களப் பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கினார்கள்.





01.10.2025
பத்தாம் ஆண்டு நினைவேந்தல்




ஆற்காடு நகர கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.
ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட பொருளாளர், தணிக்கைக்குழு உறுப்பினர்

முன்னாள் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்

P.N.சுப்பிரமணியன் Ex.MLA.,

கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்துகாட்டி,
கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தாய்! என்றும் நீங்கள் வகுத்துத்தந்த
கழகப்பாதையில் தடம்மாறாது எங்கள் பயணம் தொடரும்.

என்றும் உங்களது நீங்காத நினைவுகளை சுமந்து

P.N.S.இராஜசேகரன்
நகர அவைத்தலைவர்
முன்னாள் நகர செயலாளர்-ஆற்காடு

Dr.P.N.S.சரவணன் M.B.B.S.,M.S.,F.A.I.S.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்,
இராணிப்பேட்டை

Dr.S.பவளக்கொடி சரவணன் B.D.S.,
ஆற்காடு நகரமன்ற துணைத்தலைவர், ஆற்காடு நகராட்சி
மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவி, இராணிப்பேட்டை

மற்றும் குடும்பத்தினர்கள் ஆற்காடு நகரம், இராணிப்பேட்டை மாவட்டம்